[1979 மார்ச் 13

*வினா எண் 379—திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் மகப்பேறு பிரிவில் தேவையான அளவு கட்டில்களை அதிகரிக்க உத்தேசம் உண்டா?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்):

இல்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே போட்ட கேள்வியைத்தான் மீண்டும் போடுகிறேன். அங்கே கோவையில் ஒரு ஆக்சிடெண்ட் யூனிட் ஏற்படுத்தப்பட்டு, 32 படுக்கைகளும் தயார் செய்யப்பட்டு, எக்ஸ்ரே மிஷின்கள் புதிதாக வாங்கி வைக்கப்பெற்று, டாக்டர்கள் இருந்தும் ஸ்டாப்கள் இல்லாததால் வேலை செய்யாமல் இருக்கிற நிலையை மாற்றி உடனடியாக அங்கே வேலை துவங்க ஸ்டாப் சாங்ஷன் செய்ய அரசு முன்வருமா?

(முற்பகல் 10.00)

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் தலைக் காயங்களுக்கு மட்டும் சிகிச்சை அளிக்க விசேஷ பிரிவு எதுவும் இதுவரையில் ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் பொதுவாக விபத்துக்களில் பாதிக்கப்படுகிறவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்க 30 படுக்கைகள் வசதி கொண்ட விபத்து சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தலைக் காயங்கள் உட்பட இதில் அடங்கும். இந்த விபத்துப் பிரிவில் நியமிக்கப்படும் வல்லுநர்கள், அவர்கள் பொதுவாக பட்ட மேல்படிப்புப் படிக்கும்போதே தலைக் காயங்களுக்கு சிகிச்சை அளிக்கவும் போதிய பயிற்சி பெறுகின்றார்கள். ஆகவே, அங்கே தலைக் காயங்களுக்கு சிகிச்சை அளிக்க ஆதார வசதிகள் இல்லை என்ற குறைபாடு இருக்கிறதே தவிர, வேறு குறைபாடு எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஒரு உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. ஒழுங்குப் பிரச்சினை

சம்பந்தப்பட்ட அமைச்சர் இருக்கும்போது அவரது பேரவைச் செயலர் பதிலளிப்பது குறித்து.

திரு. சி. ஆறுமுகம் : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர், அமைச்சர் இருக்கும்போது அவருடைய செயலாளர் பதில் சொல்லலாமா? அப்படிப் பதில் சொல்ல விதி இருக்கிறதா?

1979 மார்ச் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் சொல்லலாம். இரண்டுபேரில் யார் வேண்டுமானாலும் பதில் சொல்லலாம். பதில் அளிக்கின்ற உரிமை அமைச்சரிகளின் பேரவைச் செயலர்களுக்கு இருக்கிறது. அதற்கு விதியும் இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : விதி எங்கே இருக்கிறது? ஏற்கெனவே இருக்கின்ற நம்முடைய ரூலில் அப்படி கிடையாது. ரூல் இருக்கிறது என்றால் எப்போது திருத்தினீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Rule 2 (m); "Minister" includes any Deputy Minister or Parliamentary Secretary to whom a Minister may delegate his functions" என்று இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : நீங்கள் பார்லிமெண்ட் விதியைப் படிக்கிறீர்கள்; நம்முடைய விதியில் எங்கே இருக்கிறது? நம்முடைய விதியை இன்னும் திருத்தவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய பேரவை விதிகள்தான்.

(3) தகவல் கோரல்

(அ) துணைக் கேள்விகள் அதிகமாக அனுமதிப்பது குறித்து.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : சட்டமன்றத்தில் கேள்வி நேரம் மிக முக்கியமான ஒன்று. முக்கியமான கேள்விகளில் கூட எங்களுக்கு கேள்வி கேட்க உரிமை கிடையாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் கேட்கும்போது மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாக இருக்க வேண்டும். இந்தக் குறிப்பிட்ட கேள்வியில் துணைக்கேள்விக்கு நீங்கள் என்னுடைய கவனத்தை ஈர்க்கவில்லை. என்னுடைய கவனம் ஈர்க்கப்பட்டிருந்தால் நிச்சயமாக உங்களுக்கு அனுமதி அளித்திருப்பேன். வினாக்கள்-விடைகள் பகுதிக்கு எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது ஒரு மணி நேரம் தான். அதற்குள் நான் கேள்விகளை முடிக்க வேண்டும், சரியாக 10.00 மணி ஆகிவிட்டதால் நான் அடுத்த நிகழ்ச்சிக்கு வந்துவிட்டேன். தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்த கேள்வி நேரத்தில் தான் மக்களுடைய முக்கியமான பிரச்சனைகளுக்குத் தீர்வு காண வேண்டியிருக்கிறது. அதனால்தான் அத்தனை அங்கத்தினர்களும் இங்கே இருக்கிறார்கள். முக்கியமான கேள்விகளுக்கு, நேரம் இல்லாவிட்டாலும், தங்கள் அனுமதி அளிக்க வேண்டும். இதற்கு முன்னால் அனுமதி அளித்திருக்கிறீர்கள். தங்களுடைய தீர்ப்பைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. தயுவுசெய்து இந்தக் குறிப்பிட்ட கேள்வியில் இன்னும் சில துணைக் கேள்விகளுக்கு அனுமதி கொடுங்கள்.